(ஆ) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 288 (1)-வது விதியின் கீழ் 1982-83 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்'' என்று முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

6. அறிவிப்புகள்

உரிமைக் குழு அவைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் உரிமைக் குழு (கமிட்டி ஆப் பிரிவிலேஜஸ்) அவைக்குழு (ஹவுஸ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குச் சட்ட மன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும், வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்,

வேட்புத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 தேதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் தேதி சனிக் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பெறும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படு மாயின் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 9—00 மணிக்கும் பகல் 1—00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடை பெறும்.

(முற்பகல் 10.10)

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.